Regd with the Registrar of Newspapers for India No. TN TAM/2007/22101
Regd. TN/CC(S)Dn/326/13-15 Date of Publication 25th of Every Month




Owned and Published by: S. Paulraj Kennedy from A-1, Deju Plaza, No. 2, South Avenue, Srinagar Colony, Saidapet, Chennai - 600 015. Phone: +91 - 44 - 22353500
Printed by: Jolly Peter at Sharp Offset Printers, New No. 96, Old No. 223, Peters Road, Royapettah, Chennai - 600 014. Phone: +91 - 44 - 28480607
Editor: Nija Kennedy

# ஏக்காளம்

Vol. 6
Issue. 12

தனிப்பிரதி ரூ20/=
ஆகஸ்ட் 2013





# தெய்வீக சுகம்

- சகோதரி. நிஜா கென்னடி

அவர்தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார் (மத்தேயு 8:17). இயேசுகிறிஸ்து நம் பெலவீனங்களை அறிந்திருக்கிறார். நாம் செய்த பாவங்களுக்காக அவர் துன்பப்படுத்தப்பட்டார். சரீரத்தில் வேதனைகளை அனுபவித்தார். சிலுவையில் இரத்தத்தை சிந்தினார். நம்மை பாவத்திலிருந்து, நோய்களிலிருந்து, சாபங்களிலிருந்து மீட்டெடுப்பதற்காக சிலுவையில் மரித்தார். நாம் பாவ வாழ்க்கையை விட்டு விலகி நேர்மையாக வாழ்வதற்காகவே அவர் பாடுகளை ஏற்றுக்கொண்டார். நம்முடைய நோய்களை சுமந்தார். அவருடைய காயங்களினால் குணமாக்கப்பட்டோம்.

மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களை சுமந்தார். நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எணணினோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்கு சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம் (ஏசாயா 54:4,5).

இயேசு கிறிஸ்து நம்முடைய பாடுகள், நோய்கள், பலவீனங்கள், துக்கங்கள் யாவையும் சிலுவையில் சுமந்து தீர்த்தார். நாம் சுமந்து கொண்டிருக்க தேவையில்லை. அதை விசுவாசித்து சுகத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். நாம் சுகமாகும்படியே அவர் தமது சரீரம் முழுவதிலும் காயங்களை ஏற்றுக்கொண்டார். அந்த தழும்புகளால் நாம் சுகமாகிறோம்.

வியாதிகள் எந்த வயதிலும் எப்பொழுதும் யாருக்கும் வரலாம். சிலர் உடலில் சின்ன வலி வேதனை வந்தாலும் மிகவும் பயப்படுவார்கள். கொடிய வியாதியாயிருக்குமோ? படுக்கையில் படுத்துவிடுவோமோ மரித்துவிடுவோமோ, யார் தங்களை கவனிப்பார்கள்? யார் தங்கள் குடும்பத்தை கவனிப்பார்கள்? பிள்ளைகள் தங்களை கவனிப்பார்களா? என்று பலவிதமாக யோசித்து பயந்து கொண்டேயிருப்பார்கள். பலவிதமான எண்ணங்கள் அவர்கள் மனதிற்குள் ஓடிக்கொண்டேயிருக்கும். பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது என்று கர்த்தர் நமக்கு வாக்கு கொடுத்திருக்கிறார் (சங்கீதம் 91:10). அதனால் எந்த நோயும் நமக்கு வராது. நாம் சுகத்தோடு, ஆரோக்கியத்தோடு வாழ்வதையே தேவன் விரும்புகிறார். நாம் தேவனுடைய சாயலில் உண்டாக்கப்பட்டிருக்கிறோம். ஆதலால் எந்த வியாதியும் நம்மை அணுக முடியாது. தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார் (2 தீமோத்தேயு 1:7). ஆதலால் வியாதிகள் வந்துவிடுமோ என்று நாம் பயப்படக்கூடாது.

நான் வியாதியோடிருக்கிறேனே, என்னுடைய அன்றாடக் கடமைகளை என்னால் செய்ய முடியவில்லையே, எப்பொழுதும் மறறவர்களையே சார்ந்து இருக்கிறேனே, வியாதியின் வேதனையை என்னால் தாங்க முடியவில்லையே என்று சோர்ந்துபோய் இருக்கிறீர்களா? எப்பொழுதும், துக்கத்தோடு, மனவேதனையோடு சந்தோஷத்தை இழந்து, எப்பொழுது இந்த வியாதி என்னைவிட்டு விலகும்? யார் என் சரீரத்தின் வேதனைகளை அறிவார்கள்? இருதயத்தின் துக்கங்களை யாரால் புரிந்து கொள்ள முடியும் என்று ஏங்கி தவிக்கிறீர்களா? பிரியமானவர்களே! கர்த்தர் உங்கள் வேதனைகளை அறிந்திருக்கிறார். அவர் வியாதியிலிருந்து உங்களை விடுவிக்க வல்லவராயிருக்கிறார். அவரால் மட்டுமே நமக்கு சுகம் தர முடியும் என்று விசுவாசிக்க வேண்டும். நாம் விசுவாசிக்கும்போதுதான் சுகத்தை பெற்றுக்கொள்ள முடியும் படுக்கையின்மேல் வியாதியாய்க் கிடக்கிற அவனைக் கர்த்தர் தாங்குவார். அவனுடைய வியாதியிலே அவன் படுக்கை முழுவதையும் மாற்றிப் போடுவீர் (சங்கீதம் 41:3).

இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்த நாட்களில், ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும், பிசாசின் கட்டுகளில் இருந்த அநேகரை விடுவித்தார். இயேசு கிறிஸ்து வருகிறார் என்று கேள்விப்பட்டவுடன் திரளான ஜனங்கள் அவருக்கு பின் சென்றார்கள். அவரைப்பற்றி அறிந்த யாவரும் அவர் இருக்கும் இடத்திற்கு வந்தார்கள். நோயாளிகள் அனைவரையும் அவரிடம் அழைத்து வந்தார்கள். அவருடைய வஸ்திரத்தின் ஒரத்தையாகிலும் அவர்கள் தொடும்படி உத்தரவாக வேண்டுமென்று அவரை வேண்டிக் கொண்டார்கள்; தொட்ட யாவரும் சொஸ்தமானார்கள் (மத்தேயு 14:36). இன்றைக்கும் நோயினால் அவதிப்படுபவர்களை இயேசு கிறிஸ்து விடுவிக்க வல்லவராயிருக்கிறார். எப்பேர்ப்பட்ட வியாதியையும் இயேசு கிறிஸ்துவால் குணமாக்க முடியும். அவர் சென்ற சில கிராமங்களில், ஜனங்களுடைய அவிசுவாசத்

தால் அவரால் அற்புதங்களை செய்ய முடியவில்லை.

இயேசு கப்பர்நகூமிற்கு சென்ற போது, நூற்றுக்கு அதிபதி ஒருவன் அவரிடத்தில் வந்த, ஆண்டவரே என் வேலைக்காரன் திமிர்வாதமாய்க் கிடந்து மிகுந்த வலியினால் வேதனைப்படுகிறான் என்று சொன்னான் (மத்தேயு 8:6). இயேசு கிறிஸ்து அவனிடம் நான் வந்து அவனை குணப்படுத்துவேன் என்றார். அதற்கு அவன் ஆண்டவரே நீர் என் வீட்டிற்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல; ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான் என்றான். இயேசு கிறிஸ்து இதைக்கேட்டு ஆச்சரியமடைந்து, இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று சொல்லி அவனைப்பார்த்து, நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்கடவது என்றார். அந்நேரத்திலேயே அவன் வேலைக்காரன் சுகமானான்.


நூற்றுக்கதிபதி இயேசு கிறிஸ்துவிடமுள்ள வல்லமையை அறிந்து வைத்திருந்தான். சகல அதிகாரத்தையும் உடையவர், ஒரு வார்த்தை சொன் னால் சுகம் உண்டாகும் என்று விசு வாசித்தான். அவனுடைய விசுவாசத் தின்படியே வேலைக்காரனுக்கு சுகம் கிடைத்தது. நாம் எப்படியிருக்கிறோம்? நம்மிடமுள்ள விசுவாசம் எப்படியிருக்கிறது? அவிசுவாசத்தோடு, சந்தேகத்தோடு இருந்தால் அவரால் அற்புதம் செய்ய முடியாது. நாம் நூற்றுக்கதிபதியைப்போல இயேசு கிறிஸ்துவின்மேல் விசுவாசம் வைக்க வேண்டும்.

நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள் (மத்தேயு 21:22). நீங்கள் ஜெபம் பண்ணும்போது, எவைகளைக் கேட்டுக் கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக் கொள்வோம் என்று விசுவாசியுங்கள். அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும். (மாற்கு 11:24). நம் நோய்களை இயேசு கிறிஸ்துவால் குணமாக்க முடியும் என்று விசுவாசத்தோடுகூட ஜெபிக்கும் போது, நம் நோய்கள் குணமாகும். அற்புத சுகம் உண்டாகும். நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக் கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார் (யோவான் 16:23). இயேசு கிறிஸ்துவின் நாமத்தை சொல்லி நாம் ஜெபிக்க வேண்டும். எந்த கொடிய வியாதியையும் இயேசு கிறிஸ்துவால், சுகமாக்க முடியும். அவரால் கூடாதது ஒன்றும் இல்லை. நாம் அவரோடுகூட ஐக்கியமாய் இருந்து, ஜெபிக்கும் ஜெபத்திற்கு பதிலளித்து, நோய்களை குணமாக்குவார்.

தொழுநோயால் பாதிக்கப்பட்ட ஒருவன் இயேசு கிறிஸ்துவின் முன்பாக பணிந்து, ஆண்டவரே! உமக்கு சித்தமானால், என்னை சுத்தமாக்க உம்மால் ஆகும் என்றான். இயேசு மனதுருகி தமது கையை நீட்டி, அவனைத் தொட்டு: எனக்கு சித்தமுண்டு, சுத்தமாகு என்றார். இப்படி அவர் சொன்னவுடனே, குஷ்டரோகம் அவனைவிட்டு நீங்கிற்று. அவன் சுத்தமானான் (மாற்கு 1:41-42).



இயேசு கிறிஸ்துவின் காலத்தில் தொழுநோய் பயங்கரமான தொற்று வியாதியாயிருந்தது. தொழுநோய் வந்தவர்களை வீட்டைவிட்டு, பட்டணத்தை விட்டு வெளியேற்றி விடுவார்கள். குஷ்டரோகிகள் அனைவரும் ஒரு குறிப்பிட்ட பகுதியில் வாழ்ந்தார்கள். இந்த குஷ்டரோகியோ கர்த்தர் தன்னை சுகமாக்கும்படி கெஞ்சினான். அவன் இயேசு கிறிஸ்துவிடம் உம்மால் என்னை சுகப்படுத்த முடியும், அந்த வல்லமை உம்மிடத்தில் உண்டு என்று சொன்னான். இயேசு கிறிஸ்து மனமிரங்கி, அவன் தொழுநோயாளியாயிருந்தபோதும், தமது கையை நீட்டி அவனைத் தொட்டு சுகப்படுத்தினார். வியாதியால் நமது மனது படும் வேதனைகளை அவர் அறிந்திருந்தார். எந்த மனிதனாலும் நம் வேதனைகளை அறிந்து கொள்ள முடியாது. நம் மேல் மனமிரங்கி நம் வேதனைகளை நீக்கி, நமக்கு சுகத்தைக் கொடுக்க அவர் வல்லவராயிருக்கிறார்.



பன்னிரண்டு வருஷமாய் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீ, நான் அவருடைய வஸ்திரத்தையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன் என்று தன் உள்ளத்தில் எண்ணிக் கொண்டு, அவர் பின்னாலே வந்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள். இயேசு திரும்பி அவளைப் பார்த்து; மகளே, திடன்கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். அந்நேரம் முதல் அந்த ஸ்திரீ சொஸ்தமானாள் (மத்தேயு 9:20-22). அந்த ஸ்திரீ பன்னிரண்டு வருடங்களாக சரீரத்தில் வேதனைப் பட்டுக் கொண்டிருந்தாள். தன் பணத்தையெல்லாம் மருத்துவர்களுக்கு செலவழித்தும் சுகம் கிடைக்கவில்லை. எந்த மருத்துவர்களாலும் அவளை குணமாக்க இயலவில்லை. அவளது மனது எவ்வளவு வேதனையோடிருந்திருக்கும். அவள் இயேசு கிறிஸ்து வருகிறார் என்று கேள்விப்பட்டவுடன் தனக்கு சுகம் கிடைக்கும் என்று விசுவாசத்தோடுகூட சென்றாள். திரளான ஜனங்கள் இயேசு கிறிஸ்துவை நெருக்கிக் கொண்டிருந்தார்கள். கூட்டத்தின் மத்தியிலும்

எப்படியாவது அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தையாகிலும், தொட்டுவிட வேண்டும் என்ற தீர்மானத்தோடு கூட போய் தொட்டாள். உடனே அவளுடைய பெரும்பாடு நின்று போயிற்று. இயேசு கிறிஸ்துவிடமிருந்து வல்லமை புறப்பட்டு வந்து சர்வாங்க சுகத்தை அவளுக்கு கொண்டு வந்தது. அவள் விசுவாசித்ததால், குணமாக்கப்பட்டாள். பிரியமானவர்களே! நாமும் விசுவாசித்தால் நம்முடைய நோய்களையும் இயேசு கிறிஸ்துவால் சுகப்படுத்த முடியும். பல வைத்தியர்களிடம் சென்றும் சுகம் கிடைக்கவில்லையா? இயேசு கிறிஸ்துவால் சுகம் கொடுக்க முடியும். இருதயத்தின் காயங்களையும் ஆற்ற முடியும்.

**முப்பத்தியெட்டு வருஷம் வியாதியாயிருந்த மனுஷனை இயேசு கண்டு, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட என்றார் (யோவான் *5:8*).** உடனே அந்த மனுஷன் சொஸ்தமடைந்து தன் படுக்கையை எடுத்துக் கொண்டு நடந்துபோனான். அவன் பக்க வியாதியினால் பாதிக்கப்பட்டு, நடக்க முடியாமல் படுத்த படுக்கையாயிருந்தான். எழுந்து நடப்போம் என்கிற நம்பிக்கையே இல்லாமல் இருந்தான். இயேசு கிறிஸ்து அவன்மேல் மனதுருகி, அவன் எழுந்து நடக்கும்படி செய்தார். நம்முடைய வாழ்க்கையிலும் நம்பிக்கையை இழந்துபோய் இருந்தாலும் நமக்கு அற்புதமான சுகத்தை கொடுக்க நம் தேவனால் முடியும். நமக்கு தெய்வீக சுகத்தை கொடுத்து, நம் வாழ்க்கையையே மாற்ற தேவன் வல்லவராயிருக்கிறார். நானே உன் பரிகாரியான கர்த்தர் என்று சொல்லுகிறார். அவரால் சுகமாக்க முடியாத வியாதியேயில்லை. வியாதிப்படுக்கையை மாற்றி நம்மை எழுந்து நடக்கச் செய்வது கர்த்தருக்கு லேசான காரியம். இத்தனை வருடங்களாக வியாதியோடிருக்கிறேனே என்று சோர்ந்து போகாதிருங்கள். கர்த்தரால் சுகம் கொடுக்க முடியும். அவரால் குணமாக்க முடியாத வியாதியே இல்லை.

**பிசாசு பிடித்திருந்த அநேகரை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். அவர் அந்த ஆவிகளை நமது வார்த்தையினாலே துரத்தி, பிணியாளிகளெல்லாரையும், சொஸ்தமாக்கினார்** (மத்தேயு *8:16*). இயேசு கிறிஸ்து தொட்டவுடன் சுகம். ஒரு வார்த்தை சொன்னவுடன் சுகம். அசுத்த ஆவிகளை தமது வார்த்தையினாலே துரத்தினார். அவருக்கு எல்லா அசுத்த வல்லமைகளின்மேலும், நோய்கள் மேலும் அதிகாரம் இருந்தது.

**பதினெட்டு வருஷமாய்ப் பலவீனப்படுத்தும் ஆவியைக் கொண்ட ஒரு ஸ்திரீ அங்கேயிருந்தாள். அவள் எவ்வளவும் நிமிரக்கூடாத கூனியாயிருந்தாள்** (லூக்கா *18:11*). சில நோய்கள், அசுத்த ஆவியினால் வருகிறது. அந்த ஸ்திரீயால், நிமிர்ந்து நிற்க முடியவில்லை. இயேசு கிறிஸ்து அவளிடம் ஸ்திரீயே உன் பலவீனத்தினின்று விடுதலையாக்கப்பட்டாய் என்று சொல்லி அவள்மேல் தமது கைகளை





வைத்தார். உடனே அவள் நிமிர்ந்து தேவனை மிகமைப்படுத்தினாள். பதினெட்டு வருஷங்களாய் சாத்தான் அவளை கட்டி வைத்திருந்தான். இயேசு கிறிஸ்து அவளை சாத்தானின் கட்டிலிருந்து விடுவித்தார்.

தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கைசெய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான் (நீதிமொழிகள் *28:13*). நாம் செய்ய எல்லா பாவத்தையும் இயேசு கிறிஸ்துவிடம் அறிக்கை செய்து, அவருடைய இரத்தத்தால் கழுவப்படும்போது அவருடைய பிள்ளைகளாய் மாறிவிடுகிறோம். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து வாழும் தேவபிள்ளைகளின் வாழ்க்கையில் தீய காரியங்கள் நிகழாது. எந்தவிதமான நோய்களும் வராது என்று கர்த்தர் வாக்கு கொடுத்திருக்கிறார். அந்த வாக்கை நாம் விசுவாசித்து சுதந்தரித்துக் கொள்ளவேண்டும். வாக்குத்தத்தங்களைக் கொடுத்த நம் தேவன் உண்மையுள்ளவர். வாக்கு மாறாதவர்.

கர்த்தருக்கு பயந்து, அவருடைய எல்லா கட்டளைகளுக்கும் கீழ்ப்படிந்தால் எகிப்தியருக்கு வந்த வியாதிகளை


## வேத ஆராய்ச்சி பாடங்கள்

**வாரந்தோறும் – திங்கள் கிழமைகளில்**
**மாலை – 6.30 மணி முதல் 8.30 மணி வரை**
**இடம் : ஏ–4, டேஜு ப்ளாசா**
**2, தெற்கு அவென்யு**
**ஸ்ரீநகர் காலனி**
**சைதாப்பேட்டை**
**சென்னை – 600 015**
**(சைதாப்பேட்டை கோர்ட் அருகில்)**



***வேதத்தின் ஆழங்களைப் படித்து தெரிந்துகொள்ளவேண்டும் என்று வாஞ்சிப்பவர்கள் இதில் கலந்து கொள்ளலாம்***

வரவிடமாட்டேன் என்று கூறுகிறார். கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிவோம். சுகத்தை பெற்றுக் கொள்வோம். **நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து, அவர் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால், நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன்; நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்** (யாத்திராகமம் 15:26).

**உங்கள் தேவனாகிய கர்த்தரையே சேவிக்கக்கடவீர்கள்; அவர் உன் அப்பத்தையும் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார். வியாதியை உன்னிலிருந்து விலக்குவேன்** (யாத்திராகமம் 23:25). கர்த்தர் ஒருவரே ஜீவனுள்ள தேவன். மனிதனின் கையினால் உண்டாக்கப்பட்ட விக்கிரகங்கள் தெய்வமல்ல. **உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக** (மத்தேயு 4:10). என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண் டாம். மேலே வானத்திலும், கீழே பூமியிலும் பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம் (உபாகமம் 5:7,9). கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து அவரை மட்டும் ஆராதித்து தொழுதுகொள்ளும்போது, அவர் நம்மை ஆசீர்வதிப்பார். நம்மிலிருந்து எல்லா நோயையும் அகற்றுவார் (உபாகமம் 28:5).

கர்த்தருடைய கட்டளைகளை உண்மையாய் பின்பற்றும் ஒவ்வொருவருக்கும் கர்த்தர் வாக்கு கொடுக்கிறார். **கர்த்தர் சகல நோய்களையும் உன்னை விட்டு விலக்குவார்; உனக்கு தெரிந்திருக்கிற எகிப்தியரின் கொடிய ரோகங்களில் ஒன்றும் உன்மேல் வரப்பண்ணாமல், உன்னைப் பகைக்கிற யாவர் மேலும் அவைகளை வரப்பண்ணுவார்** (உபாகமம் 7:15). கர்த்தருடைய வார்த்தையின்படி நாம் நடக்காத போதுதான், துன்பங்களும் நோய்களும் வரும் (உபாகமம் 28:58-60).

### வார்த்தையினால் சுகம்

நாம் கர்த்தருடைய வார்த்தையை படித்து, அதை தியானிக்க வேண்டும். அந்த வார்த்தைகள் நம் உடலிலிருக்கிற வியாதியை சுகப்படுத்துகிறது. சரீரத்திலுள்ள காயங்களை ஆற்றுகிறது. உடைந்த இருதயங்களைக் குணமாக்கி, உள்ளத்தின் காயங்களை ஆற்றுகிறது.

**என் மகனே, என் வார்த்தைகளைக் கவனி; என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய், அவைகள் உன் கண்களை விட்டுப் பிரியாதிருப்பதாக; அவைகளை உன் இருதயத்துக்குள்ளே காத்துக்கொள். அவைகளைக் கண்டு பிடிக்கிறவர்களுக்கு அவைகள் ஜீவனும், அவர்கள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாம்** (நீதிமொழிகள் 4:20-22).

கர்த்தருடைய வார்த்தை உடல் முழுவதற்கும் சுகத்தையும், ஆரோக்கியத்தையும் தருகிறது. கர்த்தருடைய வார்த்தை நல்ல சுகமான வாழ்வை யும், நீடிய ஆயுசு நாட்களையும் தருகிறது. இழந்துபோன ஆரோக்கியத்தை மீண்டும் பெற்றுக்கொள்ளச் செய்கிறது. வார்த்தை நோய் தீர்க்கும் மருந்தாக உள்ளது. வியாதியிலிருந்து விடுவிக்கிறது. நோய்களை நீக்குகிறது. நம் உடல் சோர்வுகள், மனச்சோர்வுகளை அகற்றி புத்துணர்ச்சியோடு வைக்கிறது.

**அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கி, அவர்களை அழிவுக்குத் தப்புவிக்கிறார்** (சங்கீதம் 107:20). வியாதிகள் வரும்போதும் கர்த்தர் தமது வசனத்தை அனுப்பி குணமாக்குகிறார். தாவீதுக்கு நோய் வந்தபோது, அவன் கர்த்தரை நோக்கி கூப்பிட்டு சுகத்தை பெற்றுக் கொண்டான். **என் தேவனாகிய கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிட்டேன். நீர் என்னை குணமாக்கினீர்** (சங்கீதம் 30:2).


**உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய் பூசி, அவனுக்காக ஜெபம் பண்ணக்கடவர்கள். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்** (யாக்கோபு 5:14,15). நாம் எண்ணெய் பூசி, விசுவாசத்தோடு கூட இயேசுவின் நாமத்தைச் சொல்லி ஜெபிக்கும்போது சுகத்தை பெற்றுக் கொள்ளலாம்.

**அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி** (சங்கீதம் 103:3). சில நோய்கள் பாவத்தினால் வருகிறது. மனுஷன் பாவம் செய்ததினால் தனக்குத்தானே நோயை வருவித்துக் கொள்கிறான். விதைப்பும் அறுப்பும் என்னும்

ஜெப தேவைக்கும்
தேவ ஆலோசனைக்கும்

+ 91 - 44 - 22353500
+ 91 - 9940667881

www.kennedyministries.org
E-mail: nijakennedy@yahoo.com



பிரமாணத்தின்படி, பாவிகள் தாங்கள் விதைத்ததை அறுக்கிறார்கள். நிர்மூடர் தங்கள் அக்கிரமங்களினால் நோய் கொண்டு ஒடுங்கிப்போகிறார்கள். நாம் என்ன பாவம் செய்திருந்தாலும், இயேசு கிறிஸ்துவிடம் அறிக்கை செய்து மன்னிப்பை பெற்றுக் கொள்ள வேண்டும்.

**யூதாவின் ராஜாவாகிய ஆசாவின் முதிர்வயதான காலத்தில் அவனுடைய கால்களில் வியாதி கண்டிருந்தது** (1 இராஜாக்கள் 15:23). ஆசா அரசாண்ட முப்பத்தொன்பதாம் வருஷத்திலே அவன் கால் பாதத்தில் நோய் வந்தது. அவன் நோவு மிகவும் உக்கிரமாயிருந்தது. அவன் தன் வியாதியிலும் கர்த்தரை அல்ல, பரிகாரிகளையே தேடினான். அவன் கர்த்தரை முற்றிலுமாக புறக்கணித்தான். கர்த்தர் தனக்கு சுகம் தருவார் என்று அவருடைய உதவியை நாடவில்லை. மருத்துவர்களையே நம்பினான். நாம் எவ்வளவு மருந்துகள் சாப்பிட்டாலும் கர்த்தர்தான் நமக்கு சுகத்தை தரமுடியும். **கர்த்தரே பரம வைத்தியர்.** சுகமளிக்கும் தெய்வம்.

**மனுஷன்மேல் நம்பிக்கை வைத்து, மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக் கொண்டு, கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்** (எரேமியா 17:5). மற்ற மனிதர்கள் மேல் நம்பிக்கை வைத்து, அவர்களைச் சார்ந்து இருப்பவர்களின் வாழ்க்கை சபிக்கப்பட்டதாயிருக்கும். ஆசா கர்த்தரை சார்ந்திராமல் மருத்துவர்களையே சார்ந்திருந்தான். தான் அரசாண்ட நாற்பத்தோராம் வருஷத்தில் மரித்தான்.

**எசேக்கியா ராஜா வியாதிப்பட்டு மரணமடையும் தருவாயில் இருந்தான். ஏசாயா தீர்க்கதரிசி அவனிடத்தில் வந்து, நீர் உமது வீட்டுக்காரியத்தை ஒழுங்குபடுத்தும், நீர் பிழைக்கமாட்டீர் மரித்துப் போவீர் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்** (2 இராஜாக்கள் 20:1). உடனே எசேக்கியா ராஜா கர்த்தரை நோக்கி நான் உமக்கு முன்பாக உண்மையும், மன உத்தமுமாய் நடந்து உமது பார்வைக்கு, நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும் என்று ஜெபித்தான். ஏசாயா தீர்க்கதரிசி பாதிமுற்றத்தை விட்டு விலகு முன், கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு வந்தது. அவன் எசேக்கியாவிடம் திரும்பிப்போய், உன் விண்ணப்பத்தைக் கேட்டேன், உன் கண்ணீரைக் கண்டேன்; நான் உன்னை குணமாக்குவேன்; உன் நாட்களோடே பதினைந்து வருஷங்களை கூட்டுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான். ஏசாயா அத்திப் பழத்தின் அடையை புண்களின்மேல் பற்று போடச் சொன்னான். அப்படிப் போட்டபோது குணமானான்.





கர்த்தர் எசேக்கியாவின் கண்ணீரின் ஜெபத்திற்கு உடனே பதில் கொடுத்தார். எசேக்கியாவின் ஜெபத்திற்கு பதில் கொடுத்து, வியாதியைக் குணப்படுத்தினவர், நம்முடைய ஜெபத்திற்கும் பதில் கொடுப்பார். வியாதிகளை குணமாக்குவார். நீடிய ஆயுசு நாட்களைத் தருவார்.

நாம் நல்ல சுகத்தோடு, பெலத்தோடு, ஆரோக்கியத்தோடு இருப்பதே கர்த்தருடைய கிருபையால்தான். அதற்காக கர்த்தருக்கு தினமும் நன்றி சொல்ல வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுலுக்கு கர்த்தர் இப்படியாகக் கூறுகிறார். **என் கிருபை உனக்கு போதும், பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்** (2 கொரிந்தியர் 12:9).

நாம் இயற்கைக்கு முரணாக வாழமுற்படும்போது, சுகவீனம் வரும்.

**நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்!**

குறிப்பிட்ட வேளையில் நம் சாப்பிடாமல் இருக்கும் போதும், கெட்டுப் போன, உணவுகளை சாப்பிடும் போதும், பகலில் சாப்பிட வேண்டிய குளிர்ச்சியான உணவை இரவு நேரத்தில் சாப்பிடும்போதும் வியாதிகள் வரலாம். என் ஜனங்கள் அறியாமையினால் சங்காரமானார்கள் என்று கர்த்தருடைய வார்த்தை கூறுகிறது. ஆதலால் கர்த்தர் நமக்கு கொடுத்த சரீரத்தை நன்றாக பராமரித்துக் கொள்ள வேண்டும். சரீரத்திற்கு நல்ல ஓய்வு கொடுக்க வேணடும். சத்தான உணவுகளை சாப்பிட வேண்டும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, நல்ல சுகம் தந்து உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்!

**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

**உள்நாட்டு வருட சந்தா** ரூ. 200/-

**வெளிநாட்டு வருட சந்தா** ரூ. 2000/-

**S.PAULRAJ KENNEDY** என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். **ICICI** வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

**ICICI வங்கி கணக்கின் பெயர் : S.PAULRAJ KENNEDY**

**ICICI வங்கி கணக்கு எண் : 0350 0150 7744**

**எங்களது முகவரி :** எஸ்.பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜு பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு, இந்தியா

# அழைப்பும் அபிஷேகமும்

- பால்ராஜ் கென்னடி



நமது அழைப்பையும், அபிஷேகத்தையும் பற்றி நாமே எப்படி நிதானித்து அறிந்து கொள்வது என்பதைப்பற்றி உங்களோடு பகிர்ந்துகொள்ள வாஞ்சிக்கின்றேன். கர்த்தர், என்னை எப்படி வழிநடத்தினார், எப்படி எனக்குக் கற்றுக் கொடுத்தார் என்பதை உங்களிடத்தில் பகிர்ந்து கொள்ளுகின்றேன். இது, உங்களைப்பற்றி நீங்கள் அறிந்து கொள்வதற்கு உதவியாக இருக்கும் என்று நம்புகின்றேன். இயேசு ராஜாவுக்கே மகிமை உண்டாகட்டும்!

1. தனி ஜெபம்

நான் இரட்சிக்கப்பட்டேன். பரிசுத்த ஆவியினால் அபிஷேகிக்கப்பட்டேன். தொடர்ந்து இரவு பகலாக சுமார் ஆறு மாதங்கள் வேதத்தை அந்த அபிஷேகத்தில் படித்தேன். இப்பொழுது என்னுடைய அழைப்பு என்ன, எப்படிப்பட்ட ஊழியத்தை நான் செய்ய வேண்டும் என்ற கேள்விகள் எனக்குள்ளே எழுந்தது. பல ஊழியக்காரர்களைப் போய்ப் பார்த்து ஜெபித்தேன், ஆலோசனை கேட்டேன். என்னுடைய படிப்பு, கடந்த கால எனது அனுபவங்களை அடிப்படையாக வைத்து அதையே கர்த்தர் உங்களைக் கொண்டு தொடர்ந்து செய்வார் என்றார்கள். ஆனால், என்னுடைய உள்ளமும், மனமும் அதை விட்டுவிட துடித்தது. கர்த்தருடைய இரட்சிப்பையும், அவருடைய வார்த்தையைப்பற்றி சொல்லவுமே வாஞ்சித்தேன். அதை முழு நேரமுமாக செய்ய விருப்பப்பட்டேன். ஆனால், தேவ ஊழியர்கள் சொன்னதெல்லாம் அதற்கு எதிராக இருந்தது.

நான் படித்தது, திரைப்படக் கல்லூரியில் கேமராமேனுக்கானத் துறை. வேலை பார்த்தது தொலைக்காட்சியில். கிட்டத்தட்ட பதினோரு ஆண்டுகள். ஒரு பிரபலமான ஊழியரை வைத்து மூன்று தொகுப்பு பாடல்களை படம் பிடித்திருந்தேன். அதே கேமரா துறையில் கர்த்தர் என்னைத் தமக்காகப் பயன்படுத்துவாரென்றும், பல பிரபலமான ஊழியர்களுக்கு கேமராமேனாகப் பயன்படுத்துவார் என்றும் கூறினார்கள். ஆனால், எனக்குள்ளே அதைவிட, கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கிக்கவே வாஞ்சையாய் இருந்தது. அப்போஸ்தலனாகிய பேதுரு மீன் பிடிக்கும் தொழில் செய்கிறவராய் இருந்தார். கர்த்தர் அவரை அழைத்தபோது, அவர் எல்லாவற்றையும் விட்டுவிட்டு, கர்த்தருடைய ஊழியத்தைச் செய்தார்.

நான் கேமராமேனாக இருந்தது, கர்த்தர் கொடுத்த தாலந்து. ஆனால் பிரசங்கிக்கவும், மற்றவர்களுக்காக ஜெபிப்பதற்கும் கர்த்தர் கொடுத்தது வரங்கள் (அபிஷேகம்). தாலந்தைக்காட்டிலும் முக்கியமானது வரங்கள் (அபிஷேகம்). கர்த்தர் தமக்கென ஊழியத்திற்கென்று பிரித்தெடுத்து அபிஷேகிக்கிறார். இது பிரத்தியேகமானது. அழைக்கப்பட்டவர்களோ அநேகர், தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ சிலர். ஊழிய அழைப்பு என்பது சிலருக்கே. விசுவாசிக்கான அபிஷேகம் வேறு, ஊழியக்காரனுக்கான அபிஷேகம் வேறு.

என்னுடைய அபிஷேகம் என்ன, என்னுடைய அழைப்பு என்ன, எப்படிப்பட்ட ஊழியத்தை கர்த்தர் என்னைக் கொண்டு செய்யப்போகிறார் இந்த கேள்விகள் எனக்குள் இருந்தது. இதற்காகக் கர்த்தரை நோக்கி ஊக்கமாக ஜெபித்தேன். அப்போது கர்த்தர் மிகுந்த தயவுடன் அதை எனக்குக் கற்றுக்கொடுத்தார்.

என்னுடைய தனி ஜெபத்தில் நான் ஏறெடுக்கும் துதிகளையும், ஸ்தோத்திரங்களையும் எழுதச் சொன்னார். அதை வைத்து எனக்குக் கற்றுக் கொடுத்தார். ஆபிரகாமின் தேவனே, ஈசாக்கின் தேவனே, யாக்கோபின் தேவனே, உம்மைத் துதிக்கிறேன் என்று சொன்னபோது என் ஆவி ஆத்துமாவில் களிகூருதல் இல்லை. பவுலின் தேவனே என்று நான் சொன்னபோது, என் ஆவி, ஆத்துமாவில் பெரியதொரு களிகூருதல் இருந்தது. பவுலைப் போல ஊழியம்செய்யவே உன்னை அழைத்திருக்கிறேன் என்று கர்த்தர் உணர்த்தினார். விசுவாசிகளுக்கு போதிக்கும்படியாக, புற ஜாதிகளுக்கு இயேசு கிறிஸ்துவை பிரசங்கிக்கும்படியாகத் தெரிந்தெடுத்திருக்கிறேன் என்றார். ராஜாக்களுக்கு முன்பாக நிறுத்துவேன் என்றார். அவர்களுக்கு இயேசுவைப்பற்றி சொல்லும்படியாக, அநேக ஊழியக்காரர்களுக்குக் கற்றுக் கொடுக்கும்படி பயன்படுத்துவேன் என்றார். பவுலின் தேவனே உம்மைத் துதிக்கிறேன் என்று சொல்லாமல் நான் எவ்வளவு நேரம் ஜெபித்தாலும் எனக்குள் ஜெபம் பண்ணின திருப்தி கிடைக்காது.

திக்கற்றவர்களின் தகப்பனே, விதவைகளை நியாயம் விசாரிப்பவரே, பரதேசிகளைக் காப்பாற்றுகிறவரே, அனாதைகளை விசாரிக்கிறவரே, ஏழைகளின் பெலனே, நெருக்கப்படுகிற எளியவருக்குத் திடனே, பெருவெள்ளத்துக்குத் தப்பும் அடைக்கலமே, வெயிலுக்கு ஒதுங்கும் நிழலே உம்மைத் துதிக்கிறேன் என்று நான் சொல்லும்போது என்னுடைய இருதயம் அங்கே இருப்பதை உணர்ந்தேன். அப்படி உணர்த்தியது கர்த்தரே. நான் எப்படிப்பட்ட ஜனங்களுக்கு ஊழியம் செய்யப் போகிறேன் என்பதை கர்த்தர் எனக்கு இப்படியாகக் காண்பித்தார். சிறுமைப்பட்டவர்களுக்கு சுவிசேஷம் சொல்லும்படி கர்த்தர் என்னைத் தெரிந்தெடுத்திருக்கிறார் என்பதைத் திட்டமும் தெளிவுமாகக் கற்றுக் கொடுத்தார்.

அப்போஸ்தலனாகிய பவுல், மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுப்பவனாக இருந்தான். எனக்குள் மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டுமென்ற வாஞ்சை அக்கினியாய் இருந்

தது. அவன் எழுதுகிறவனாய் இருந்தான். நான் சிறுபிராய முதலே எழுதுவதில் மிகுந்த ஆர்வமுள்ளவனாய் இருந்தேன். இது கர்த்தர் என் உள்ளத்தில் வைத்தக் காரியம்.

வேதத்தில் நான் உற்று கவனிக்கும் காரியம், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிற்கு அடுத்து, அப்போஸ்தலனாகிய பவுலின் எழுத்துக்களையே. அவனுடைய வாழ்க்கையை, கர்த்தர் அவனை வழிநடத்தின பாதையை, விதத்தை வேதத்தின் அடிப்படையில், வரிசைக் கிரமமாக தனியாக எடுத்து எழுதினேன். என்னுடைய பாதையும் இதுவே என்றத் தெளிவு உண்டானது. நான் தற்போது எந்த இடத்தில் இருக்கிறேன். எந்த இலக்கை நோக்கி போய்க் கொண்டிருக்கிறேன் என்ற நிச்சயத்தைப் பெற்றேன். எனக்கு தனிப்பட்ட விதத்தில் மற்றும் ஊழியத்தில் சோர்வு வரும்போதெல்லாம் இதை எடுத்து பார்த்துக் கொள்வேன். அதை பார்க்கும் போது எனக்குள் திடன் உண்டாகும். சோர்வை இப்படியாக மேற்கொள்ளுவேன். எந்த மனிதனும் என்னை அழைப்பின் விஷயத்தில் குழப்ப முடியாது. தேவனுக்கே மகிமை உண்டாகட்டும்.

வேதத்தில் உள்ள ஒரு பாத்திரத்தை நமக்கு முன்மாதிரியாக, முன்னோடியாகக் கர்த்தர் வைத்திருப்பார். அந்த பாத்திரத்தை எப்படி அபிஷேகித்திருந்தாரோ அதே அபிஷேகத்தை நமக்கும் தருவார்.

தானியேல், யோசேப்பு, சாலொமோன் இவர்களுடைய ஞானத்தின்மேல் எனக்கு அளவற்ற ஈடுபாடு உண்டு. தானியேலின் ஞானம், ராஜாக்களுக்கு ஆலோசனைக்காரனாக இருக்கும்படியான ஞானத்தின் அபிஷேகம். யோசேப்புக்குள் இருந்த ஞானத்தின் அபிஷேகம், பிரதான மந்திரியாய் இருக்கும்படியானது. ராஜாவாய் இருக்கும்படியானது சாலொமோனின் ஞானத்தின் அபிஷேகம். தானியேலின் அழைப்பு, ஒரு தீர்க்கதரிசிக்கானது. காலா காலங்களுக்கும் அப்பாற்பட்டக் காரியங்களையும் கர்த்தர் அவனைக் கொண்டு பேசினார். அப்படிப்பட்டக் காரியங்களுக்காக அவன் உபவாச மிருந்து ஜெபித்தான். யோசேப்பு மற்றும் சாலொமோனின் அபிஷேகம், ஒரு தேசத்தை நிர்வகிக்கும்படியானது. என்னால் நிர்வகிக்கும் ஸ்தானத்தில் இருந்து நிர்வாகத்தை நடத்த முடியாது. அதற்கான ஆற்றல் இல்லை என்று அர்த்தமல்ல. அதற்கான ஆர்வம், ஈடுபாடு இல்லை. எனக்கு ஒரு இடம் விட்டு மற்றொரு இடம் என்று போய்க்கொண்டே இருக்க வேண்டும். புதிய, புதிய ஜனங்களைக் காண வேண்டும், அவர்களை இயேசுவண்டை நடத்த வேண்டும் என்ற வாஞ்சைதான் எனக்குள் இருக்கிறது. இது ஒரு சுவிசேஷகனுக்கானது. போதகருக்கானது அல்ல.

வேதத்தில், யாத்திராகமம் 31:1-5-ல் குறிப்பிடப்பட்டிருக்கும் பெசலெயேலின் அபிஷேகமும் ஞானத்தின் அபிஷேகம்தான். ஆனால், இது கலாபூர்வமான காரியங்களை செய்வதற்கான அபிஷேகம். ஆசாரிப்புக் கூடாரத்தை எப்படி செய்ய வேண்டும் என்பதை கர்த்தர் திட்டமும், தெளிவுமாக மோசேக்கு சொல்லுகிறார். அதோடுகூட அதை பெசலெயேலை வைத்துத்தான் செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டுச் சொல்லுகிறார். ஏனென்றால், அது எல்லோராலும் செய்யப்படக்கூடிய வேலை இல்லை. அது விநோதமான வேலை. யோசித்து, யூகித்து செய்ய வேண்டும். அதற்குத் தேவையான அபிஷேகத்தை பெசலெயேலுக்கேத் தந்திருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

நானும், சிறு பிராயத்திலிருந்தே படம் வரைவதிலும், வண்ணம்



தீட்டுதலிலும் மிகுந்த ஈடுபாடு உள்ளவனாய் உள்ளேன். யாரிடமும் நான் கற்றுக் கொள்ளவில்லை. கர்த்தர் கிருபையாய் கொடுத்தத் தாலந்து. ஆனால், என்னுடைய தாலந்து, வரங்கள் இரண்டிலும் வரங்களுக்கே முதலிடம் கொடுக்க விரும்புகிறேன். இரண்டுமே கர்த்தர் அவருடைய ராஜ்யத்தைக் கட்டும்படிக்காய் கொடுத்ததே. தாலந்துகள் அநேகருக்கு உண்டு. வரங்கள் சிலரிடத்தில் மாத்திரமே உண்டு.

கர்த்தருடைய ஊழியக்காரர்களின் செய்திகளை படம்பிடித்துக் கொடுத்தல், அவர்களுடைய துதி, ஆராதனையை பல கேமராக்களைக் கொண்டு படம்பிடித்துக் கொடுத்தல், ஆலயங்களில் பிரதானமான பலிபீடத்துப் பகுதியை வண்ணம் தீட்டி கொடுத்தல், ஆலயங்களில், விளக்குகளை எப்படி அமைக்க வேண்டுமென்று ஆலோசனை கொடுத்தல், பாடல்களை படம்பிடித்துக் கொடுத்தல், இப்படிப்பட்டக் காரியங்களை கர்த்தருக்காகச் செய்கிறேன்.

இதைக் காட்டிலும், தனி மனிதனுக்கு இயேசுவைப்பற்றி சொல்வதும், சபைகளில் பிரசங்கிப்பதும், விசுவாசிகளுக்கும், ஊழியக்காரர்களுக்கும் வேதத்தின் ஆழங்களைக் கற்றுக் கொடுப்பதுமே கர்த்தருக்காக பிரதானமாகச் செய்கிறேன்.

2. கர்த்தரின் நடத்துதல்:

கடந்த 11 வருடங்களாக கர்த்தருடைய ஊழியத்தைச் செய்து வருகிறேன். அநேகருக்காக வீட்டிலும் வெளியிடங்களிலும் ஜெபித்திருக்கிறேன். ஜெபித்த எல்லோருமே என்னிடத்தில் தேவ சித்தத்தை அறிந்து கொள்ளவே ஜெபித்தார்கள். அவர்களுக்கு எந்தக் காரியமாக இருந்தாலும், அதில் தேவ சித்தத்தை தெரிந்து கொள்ளவே, விரும்பினார்கள். இது எனக்குத் தெரியவந்தது, ஊழியத்தின் ஆரம்பத்திலேயே அல்ல. கிட்டத்தட்ட ஏழு, எட்டு வருடங்களுக்குப் பிறகே. அதேபோல ஜெபிக்க வருகிறவர்கள், தரிசனங்களோடும், சொப்பனங்களோடும் வருவார்கள். அவற்றின் அர்த்தத்தைத் தெரிந்துகொள்ளும்படியாக ஜெபிக்கச் சொல்வார்கள். இவற்றையெல்லாம் கர்த்தரிடம் கேட்டுச் சொல்லுவேன். அப்பொழுதுதான் அறிந்து கொண்டேன், அதற்கான வரங்கள் எனக்குள் செயல்படுவதை. கர்த்தர் எப்படிப்பட்ட ஜனங்களுக்கு நம்மைப் பயன்படுத்த விரும்புகிறாரோ அதற்கான அபிஷேகத்தை, வரங்களை நமக்குள் வைக்கிறார். நம்முடைய அழைப்பை அறிந்து கொண்டால், நம்முடைய அபிஷேகத்தை அறிந்து கொள்ளலாம். அதேபோல நம்முடைய அபிஷேகத்தை அறிந்து கொண்டால், நம்முடைய அழைப்பை அறிந்து கொள்ளலாம்.

குடும்பமாக என்னிடம் ஜெபிக்க வருபவர்களிடம் நான் பேசும்போது, பெற்றோர், பிள்ளைகளைப் புரிந்து கொண்டு இணக்கமாகும்படியாகவும், பிள்ளைகள் பெற்றோரைப் புரிந்து கொண்டு இணக்கமாகும்படியும் இருப்பதைக் கண்டேன். இது எனக்கு முன்கூட்டியேத் தெரிந்து நடந்ததல்ல. சில ஆண்டுகளுக்குப் பிறகேத் தெரிந்தது. இதைக் குறித்துக் கர்த்தர் என்னிடம் பேசினார். இதுதான் எலியாவிற்குள் இருந்த ஆவி என்று சொன்னார். வேதத்தில் மல்கியா 4:5-6 வசனங்களில் இதைப்பற்றிச் சொல்லியுள்ளார். இந்த ஆவிதான் யோவான் ஸ்நானகனுக்குள் இருந்தது (லூக்கா 1:17). இதே ஆவிதான் எலிசாவிற்குள் இரட்டிப்பாய் இருந்தது/ இது என்னுடைய ஊழியத்தின் ஒரு பங்கு.

- தொடரும்